© தமிழ்நாடு அரசு
2018

பதிவெண் : எம்.


# திருவண்ணாமலை மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திருவண்ணாமலை, செவ்வாய்க் கிழமை, அக்டோபர் 16, 2018.

எண் 25] புரட்டாசி 30, விளம்பி, திருவள்ளுவர் ஆண்டு 2049.


## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

ந.க. டி1/32632/2018, நாள் : 15-10-2018

ந.க.எண் : 61/1999/அ2

### ஆரணி நகராட்சி

### 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் திருத்தச்சட்டம் 1998–இன் பிரிவு 124D உட்பிரிவு (13-இன்படி அறிவிப்பு விளம்பரம்)

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் திருத்தச்சட்டம் 1998–இன் பிரிவு 124D உட்பிரிவு 13- இன்படி மேற்படி உட்பிபரிவு (2-இல்) இந்நகராட்சியின் நுண்ணறிவு பிற தொழில்கள், வணிக தொழில்கள், மரபு தொழில்கள் மற்றும் பணி தொழில்களுக்கு தற்போது விதிக்கப்பட்டு வரும் தொழில்வரி விகிதங்கள் தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 12.01.1999 – ஆம் தேதிய அரசாணை எண். 11-இன்படி ஐந்தாண்டிற்கு ஒருமுறை தொழில்வரி 25% விழுக்காடு குறையாமலும் 35% விழுக்காடு மிகாமலும் உயர்த்தி தொழில்வரி நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டு உள்ளதின் பேரில் 01.10.2018 முதல் தற்போதுள்ள தொழில்வரியில் 25% விழுக்காடு குறையாமலும் 35% விழுக்காடு மிகாமலும் திருத்தியமைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டதில் இந்நகரமன்றம் 23.05.2018 ஆம் தேதிய நகரமன்ற தீர்மான எண். 61–இல் 01.10.2018 முதல் ஏற்கனவே உள்ள தொழில்வரியில் 35% விழுக்காடு உயர்த்தி நிர்ணயம் செய்ய மன்றம் தீர்மானித்துள்ளபடி 15.06.2018 ஆம் தேதிய தினசரி தமிழ்நாளிதழில் பொதுமக்களின் ஆலோசனை மற்றும் கருத்துக்களை தெரிவிக்காதபட்சத்தில் மேற்கண்ட மன்ற தீர்மானத்தின்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நுண்ணறிவு தொழில்கள், வணிக தொழில்கள், மரபு தொழில்கள் மற்றும் பணித் தொழில்களுக்கான தொழில்வரி 01.10.2018 முதல் தொடங்கும் அரையாண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளபடி வசூலிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | அரையாண்டு சராசரி வருமானம் | 01.10.2018 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்வரி ரு |
|---|---|---|
| 1. | ரு. 21,000/- வரை | இல்லை |
| 2. | ரு. 20,001/- முதல் 30,000/- வரை | ரு.183/- |
| 3. | ரு. 30,001/- முதல் ரு. 45,000/-வரை | ரு. 473/- |
| 4. | ரு. 45,001/- முதல் ரு. 60,000/-வரை | ரு. 918/- |
| 5. | ரு. 60,000-/ முதல் 75,000/- வரை | ரு. 1,250/- |

**குறிப்பு** : இந்த விளம்பரம் தொழில்வரி குறித்த முந்தைய எல்லா விளம்பரங்களையும் இரத்து செய்வதோடு 01.10.2018 ஆம் தேதி முதற்கொண்டு மறுஅறிவிப்பு செய்யப்படும் வரையில் மேற்கண்ட திருத்திய தொழில்வரி அமுலில் இருக்கும்.

ஆரணி நகராட்சி,
2018 செப்டம்பர் 20.

(ஒப்பம்) ...........,
ஆணையாளர்,
ஆரணி நகராட்சி.

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநரால் விருத்தாசலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.